சஹசக் நிமெவும் - 2018 தேசிய கண்டுப்பிடிப்பு கண்காட்சி மாகாண மட்டப் போட்டிகள்

**புதிய கண்டுப்பிடிப்புக்கள் தொடர்பில் நடைபெறும் சஹசக் நிமெவும் - 2018 தேசிய கண்டுப்பிடிப்பு கண்காட்சி மாகாண மட்டப் போட்டிகள் சம்பந்தமாக முழுமையான தகவல்கள் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள்.**

இலங்கைப் புத்தாக்குநர் ஆணைக்குழுவினால் ஒழுங்குப்படுத்தப்பட்ட மாகாண மட்டத்திலான சஹசக் நிமெவும் - 2018 தேசிய கண்டுப்பிடிப்பு கண்காட்சிக்கான தேர்வு பின்வரும் அடிப்படையில் இடம்பெறவுள்ளது.

புதிய கண்டுப்பிடிப்பாளர்களின் கண்டுப்பிடிப்புக்களை தேர்வு செய்வதற்கான மாகாண மட்டப் போட்டிகளுக்கான கால அட்டவணை.

| மாகாணம் | முதல்கட்ட தேர்வு இடம்பெறும் திகதி,இடம் | விண்ணப்ப இறுதித் திகதி |
|---|---|---|
| சப்ரகமுவ மாகாணம் | 2018.05.03- தொழில்நுட்பக் கல்லூரி- இரத்தினப்புரி. (காலை 9.00 மணி தொடக்கம்) | 2018.04.06 |
| தென் மாகாணம் | 2018.05.08 பொறியியல் பீடம்.ருகுனு பல்கலைக்கழகம். ஹபுகல.காலி (காலை 9.00 மணி தொடக்கம்)<br><br>2018.05.09 இயற்பியல் பீடம்.ருகுனு பல்கலைக்கழகம்.மாத்தறை. (காலை 9.00 மணி தொடக்கம்)<br><br>2018.05.10 தொழில்நுட்பக் கல்லூரி- பெலியத்த (காலை 9.00 மணி தொடக்கம்) | 2018.04.06 |
| கிழக்கு மாகாணம் | 2018.05.19 மகஜன கல்லூரி.மட்டகளப்பு. (காலை 9.00 மணி தொடக்கம்) | 2018.04.26 |
| வட மாகாணம் | 2018.05.21 கணனி அறிவியல் துறை.யாழ்பான பல்கலைக்கழகம். (காலை 9.00 மணி தொடக்கம்) | 2018.04.26 |
| வட மத்திய மாகாணம் | 2018.05.25 தொழில்நுட்பக் கல்லூரி- அனுராதப்புரம். (காலை 9.00 மணி தொடக்கம்) | 2018.04.26 |
| ஊவா மாகாணம் | 2018.06.02 கால்நடை அறிவியல் பீடம். ஊவா வெல்லச பல்கலைக்கழகம் (காலை 9.00 மணி தொடக்கம்) | 2018.05.07 |
| வட மேற்கு மாகாணம் | 2018.06.06. தொழில்நுட்பக் கல்லூரி-குருணாகலை. (காலை 9.00 மணி தொடக்கம்) | 2018.05.07 |
| மத்திய மாகாணம் | 2018.06.09 விவசாய பீடம். பேராதனைப் பல்கலைக்கழகம் (காலை 9.00 மணி தொடக்கம்) | 2018.05.07 |
| மேற்கு மாகாணம் | 2018.06.21 ஞானோதய கல்லூரி.களுத்துறை. (காலை 9.00 மணி தொடக்கம்)<br>2018.06.22 குருகுல கல்லூரி.களனி. (காலை 9.00 மணி தொடக்கம்)<br>2018.06.23 இலங்கைப் புத்தாக்குநர் ஆணைக்குழு(காலை 9.00 மணி தொடக்கம்)<br>2018.06.24 இலங்கைப் புத்தாக்குநர் ஆணைக்குழு(காலை 9.00 மணி தொடக்கம்) | 2018.05.21 |

மாகாண மட்டப் போட்டிகளுக்கான சாத்தியமான பிரிவுகள்)

(நீங்கள் பின்வரும் பிரிவுகளில் குறிப்பிட்ட ஒரு பிரிவில் மட்டுமே கலந்துக்கொள்ள முடியும்)

- பள்ளிகள்
- திறந்த துறையினர்
- பல்கலைக்கழகங்கள் மற்றும்,மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்கள்
- வணிகத் துறையினர்

**<u>பள்ளிப் பிரிவில் கலந்துக் கொள்ளும் கண்டுப்பிடிப்பாளர்கள்</u>**

- பள்ளிப் பிரிவில் உட்பட்ட மாணவர்கள் அதிகபட்ச வயது எல்லையானது இரண்டாவது தடவையாகவும் கா.பொ.த.உயர்தர பரீட்சையில் தோற்றும் மாணவர்களின் வயது வரம்பைக் குறிக்கும். மாணவர்கள் என்ற பிரிவில் உள்ளடக்கப்பட வேண்டும். தற்போது பாடசாலையில் கல்வியை தொடரும் மாணவர்கள் மட்டுமே கவனத்தில் கொள்ளப்படும்.

- பள்ளிப் பிரிவில் உட்பட்ட மாணவர்கள் தனியாகவோ அல்லது குழுவாகவோ (குறைந்தபட்சம் 2 மாணவர்கள் )தமது கண்டுப்பிடிப்பபை முன்வைக்க முடியும்.

- பாடசாலை மாணவர்கள் சார்பில் குழுவாக தமது கண்டுப்பிடிப்பபை முன்வைக்கும் போது ஏனைய சக மாணவர்களின் பங்களிப்பும் கட்டாயமானதாகும்.

**<u>பல்கலைக்கழகங்கள் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்கள் பிரிவில் கலந்துக் கொள்ளும் கண்டுப்பிடிப்பாளர்கள்</u>**

- <u>பல்கலைக்கழகங்கள் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்கள் பிரிவில் இவை உள்ளடக்கப்படும்</u>.தற்போது <u>பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் மாணவர்கள்</u> மட்டுமே கவனத்தில் கொள்ளப்படும். <u>மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களில் கல்வி செயற்பாடுகளளைத் தொடரும் மாணவர்கள்</u> மட்டுமே கவனத்தில் கொள்ளப்படும்.தனியாகவோ அல்லது குழுவாகவோ தமது கண்டுப்பிடிப்பபை முன்வைக்க முடியும்.அவ்வாறு முன்வைக்கும் போது விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் எந்தவொரு தகவல்களையும் மாற்றியமைக்க முடியாது.குழுவாக தமது கண்டுப்பிடிப்பபை முன்வைக்க விரும்பும் மாணவர்கள் பல்கலைக்கழக ஆசிரியர்களை உறுப்பினர்களாகவும் அல்லது ஆலேசனையாளராகவும் தெரிவு செய்ய முடியும்.

**<u>வணிகத் துறைகளுக்கான கண்டுப்பிடிப்பாளர்கள்</u>**

- வணிகத் துறைகளுக்கான கண்டுப்பிடிப்பாளர்கள் உங்கள் கண்டுப்பிடிப்பிற்கான வணிக ரீதியான தன்மை, சுற்றுச் சூழல் பாதுகாப்பு, வணிக நடத்தை,ஏற்றுமதி சந்தை

வாய்ப்பு,வருடாந்த மொத்த வருவாய் போன்றவற்றை சான்றழிப்பதற்கான பத்திரங்களை கொண்டிருத்தல் வேண்டும். உங்கள் கண்டுப்பிடிப்பிற்கான வணிக ரீதியாகவும் அறிவுசார் சொத்துரிமைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்துள்ளன என்பதற்கான சான்றுகளை கொண்டிருத்தல் வேண்டும்.வணிகத் துறைகளுக்கான கண்டுப்பிடிப்பு தொடர்பில் **ஆக்கவுரிமைப் சான்றிதழை பெற்றிருத்தல் அல்லது அவற்றை பெற்றுக் கொள்ளல் தொடர்பில் விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் அவசியமானதாகும்.**

**திறந்த மட்ட கண்டுப்பிடிப்பாளர்கள்**

- மேலே குறிப்பிடப்பட்டுள்ள வகுதிக்குள் அடங்காத ஏனைய அனைத்து தரப்பினரும் விண்ணப்பிக்க முடியும்.

**விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான பொது ஆலேசனைகள்**

ஆணைக்குழுவினால் கோரப்பட்ட விதிமுறைகளை கவனத்தில் கொண்டு விண்ணப்பிக்கப்படாத அனைத்து விண்ணப்பங்களும் ஆணைக்குழுவினால் நிராகரிக்கப்படும்.

ஒருவர் குறிப்பிட்ட ஒரு கண்டுப்பிடிப்பிற்கு ஒரு விண்ணப்பம் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பங்கள் குறிப்பிட்ட திகதி அல்லது அதற்கு முன்னதாக ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெரும் வகையில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்ப திகதிக்கு பின்னறான விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பங்கள் குறிப்பிட்ட திகதியில் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்தப் பின்னர் விண்ணப்பத்தில் எந்வொரு மாற்றங்களையும் மேற் கொள்ள முடியாது.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் **இலங்கைப் புத்தாக்குநர் ஆணைக்குழு.ஆணையாளர்இலக்கம் 46.48 கொட்டா வீதி.பொரளை. கொழும்பு -08 எனும் முகவரிக்கு அனுப்பப்படல்** வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூளையில் **சஹசக் நிமெவும் - 2018** என்று குறிப்பிடப்படல் வேண்டும்.

**அறிவுசார் சொத்துரிமை**

மற்றொரு நபரால் உருவாக்கப்பட்ட ஒரு கண்டுப்பிடிப்பானது மீண்டும் புதிதாக வடிவமைக்கப்பட்டு போட்டியில் சமர்ப்பிக்க கூடாது.அவ்வாறு சமர்ப்பித்து போட்டியில் வெற்றி பெறும் போது, அவை தொடர்பான உண்மைத் தன்மை அறியவரும் நிலையில், அப் புத்தாக்கத்திற்காக பெற்றுக் கொள்ளப்படும் அனைத்து சான்றிதழ்கள்,விருதுகள்,பதக்கங்கள் மற்றும் வெகுமதிகள் என்பன ஆணைக்குழுவினால் மீளப் பெறப்படும்.அத்தோடு அக் கண்டுப்பிடிப்பிற்காக உங்களால் பெற்றுக் கொள்ளப்பட்ட ஆக்கவுரிமைப் சான்றிதழும் ரத்துச் செய்யப்படும்.

**போட்டி முடிவு.**

இலங்கைப் புத்தாக்குநர் ஆணைக்குழுவின் மதிப்பீட்டுக் குழுவால் மேற்கொள்ளப்படும் முடிவே இறுதி தீர்வாக அமையும்.

**போட்டியிடும் கூறுகள்**

- ✓ மக்கள் பாதுகாப்பும் தேசிய பாதுகாப்பும்

- ✓ இரசாயன விஞ்ஞானம்
- ✓ உணவு வகைகள்
- ✓ மருத்துவமும் ஆயர்வேத மருத்துவமும்
- ✓ ஏனைய மருத்துவ முறைகள்
- ✓ கைத்தொழிலும் அடிப்படை வசதிகளும்
- ✓ இயற்பியல்
- ✓ தொடர்பாடல் தொழில்நுட்பம்
- ✓ விவசாயம்
- ✓ துாயகணித தொழில்நுட்பங்கள்
- ✓ சக்தி
- ✓ சூழலை பாதுகாத்தல்
- ✓ போக்குவரத்து
- ✓ பொறியியலாளர்

உங்கள் கண்டுப்பிடிப்பானது மேலுள்ள கூறுகளில் ஏதாவது ஒன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.